ஸ்ரீரஸ்து.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

ஸ்ரீமல்லோககுரவே நம꞉.

# ஸ்ரீவசநபூஷணத் தநியன்கள்.

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்+ஸ்ரீமத் பராங்குச முநிம்
ப்ரணதோஸ்மி நித்யம்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே ।
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம꞉ ॥

லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை꞉ கூரகுலோத்தமதாஸமுதாரம் ।
ஸ்ரீநகபத்யபிராமவரேசௌ தீப்ரசயம்வரயோகிநமீடே ॥

புருஷகாரவைபவஞ்ச ஸாதநஸ்ய கௌரவம்
தததிகாரிக்ருத்ய மஸ்ய ஸத்குரூபஸேவநம் ।
ஹரிதயாமஹேதுகீம் குரோருபாயதாஞ்சயோ
வசநபூஷணேந தஜ்ஜகத்குரும் தமாச்ரயே ॥

ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்க்ருதரூபவேத
ஸாரார்த்தஸங்க்ரஹ மஹாரஸவாக்யஜாதம் ।
ஸர்வஜ்ஞலோககுரு நிர்மிதமார்யபோக்யம்
வந்தே ஸதா வசநபூஷண திவ்யசாஸ்த்ரம் ॥

அகுண்டோத்கண்டவைகுண்ட ப்ரியாணாம் கண்டபூஷணம் ।
குருணா ஜகதாமுக்தம் வ்யாப்தம் வசநபூஷணம் ॥

[பாசுரங்கள்.]

பேறுதருவிக்குமவள் தன்பெருமை யாறுபெறுவான் முறையவன்
கூறுகுருவைப்பணுவல் கொள்வதிலையாகிய குளிர்ந்தவருள்தான்
மாறில்புகழ்நற்குருவின் வண்மையோடெலாம் வசநபூடணமதில்
தேறிடநமக்கருள் முடும்பையிறையவன் கழல்கள் சேரென்மனனே.

http://acharya.org

திருமாமகள் தன் சீருளேற்றமும்
திருமால் திருவடி சேர்வழிநன்மையும்
அவ்வழியொழிந்தன வனைத்தின்புன்மையும்
மெய்வழியூன்றிய மிக்கோர்பெருமையும்
ஆரணம்வல்லவ ரமரும்நன்னெறியையும்
நாரணன் தாள்தரு நற்குருநீதியும்
சோதிவானருள் தூயமாகுருவின்
பாதமாமலர் பணிபவர் தன்மையும்
தீதில்வானவர் தேவனுயிர்களை
ஏதமின்றி யெடுக்கும்படியையும்
மன்னியவின்பமும் மாகதியும்குரு
என்னுநிலைபெறு மின்பொருள் தன்னையும்
அசைவிலாவேத மதனுளனைத்தையும்
வசநபூடண வழியாலருளிய
மறையவர் சிகாமணி வண்புகழ்முடும்பை
யிறையவனெங்கோ னேருலகாரியன்
தேன்மலர்ச்சேவடி சிந்தைசெய்பவர்
மாநிலத்தின்பம தெய்திவாழ்பவரே.

லோகாசார்யக்ருதே லோகஹிதே வசநபூஷணே ।
தத்வார்த்த தர்சிநோ லோகே தந்நிஷ்டாச்ச ஸுதுர்லபா: ॥

ஜகதாசார்யரசிதே ஸ்ரீமத்வசநபூஷணே ।
தத்த்வஜ்ஞாநஞ்ச தந்நிஷ்டாம் தேஹிநாத யதீந்த்ரமே ॥

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமல்லோககுரவே நம:.

பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசநபூஷணம்.

## ப்ரதமப்ரகரணம்.

1. வேதார்த்த மறுதியிடுவது ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே.
2. ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்திலர்த்த மறுதியிடக்கடவது; மற்றையிரண்டாலும் உத்தரபாகத்திலர்த்த மறுதியிடக்கடவது.
3. இவையிரண்டிலும் வைத்துக்கொண்டு இதிஹாஸம் ப்ரபலம்.
4. அத்தாலே அது முற்பட்டது.
5. இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூதுபோனவனேற்றஞ் சொல்லுகிறது.
6. இவையிரண்டாலும் புருஷகாரவைபவமும் உபாயவைபவமும் சொல்லிற்றாயிற்று.
7. புருஷகாரமாம்போது க்ருபையும் பாரதந்த்ர்யமும் அநந்யார்ஹத்வமும் வேணும்.
8. பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக. நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக. அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக.
9. ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டிலும் புருஷகாரத்வந்தோற்றும்.
10. ஸம்ச்லேஷ தசையில் ஈச்வரனைத் திருத்தும்; விச்லேஷ தசையில் சேதநனைத் திருத்தும்.
11. இருவரையும் திருத்துவது முபதேசத்தாலே.
12. உபதேசத்தாலே இருவருடையவும் கர்மபாரதந்த்ர்யம் குலையும்.
13. உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை அருளாலே திருத்தும்; ஈச்வரனை அழகாலே திருத்தும்.
14. அறியாதவர்த்தங்களையடைய அறிவித்து ஆசார்ய க்ருத்யத்தையும் புருஷகார க்ருத்யத்தையும், உபாய க்ருத்யத்தையும் தானே

http://acharya.org

யேற்றிட்டுக்கொள்ளுகையாலே மஹாபாரதத்தில் உபாய வைபவம் சொல்லிற்றாயிற்று.

15. புருஷகாரத்துக்கு முபாயத்துக்கும் வைபவமாவது தோஷத்தையும் குணஹானியையும் பார்த்து உபேக்ஷியாதவளவன்றிக்கே அங்கீகாரத்துக்கு அவைதன்னையே பச்சையாக்குகை.

16. இரண்டுமிரண்டுங் குலையவேணுமென்றிருக்கில் இரண்டுக்குமிரண்டும் உண்டாயிற்றதாம்.

17. இரண்டுங் குலைந்ததென்றிருக்கில் இத்தலைக்கிரண்டும் உண்டாயிற்றதாம்.

18. ராக்ஷஸிகள் தோஷம் ப்ரஸித்தம்.

19. ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திகாக்ரேஸரனாய் "கேசவஸ்யாத்மா" என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுனனுக்கு தோஷமேதென்னில், பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வதபீதியும்.

20. த்ரௌபதீபரிபவங்கண்டிருந்தது க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரதாந தோஷம்.

21. பாண்டவர்களையும் நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க, வைத்தது த்ரௌபதியுடைய மங்களஸூத்ரத்துக்காக.

22. அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும் இவனுக்காக.

23. ப்ரபத்திக்கு தேசநியமமும் காலநியமமும் ப்ரகாரநியமமும் அதிகாரிநியமமும் பலநியமமுமில்லை.

24. விஷயநியமமே யுள்ளது.

25. கர்மத்துக்குப் புண்யக்ஷேத்ரம் வஸந்தாதிகாலம் சாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும்.

26. "ஸ ஏஷ தேசஃ காலஃ" என்கையாலே இதுக்கு தேசகால நியமமில்லை.

27. இவ்வர்த்தம் மந்த்ரரத்நத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டம்.

28. ப்ரகார நியதியில்லை யென்னுமிடம் எங்கும் காணலாம்.

29. த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று; அர்ஜுநன் நீசர் நடுவேயிறே இவ்வர்த்தங் கேட்டது.

30. ஆகையால் சுத்த்யசுத்திகளிரண்டும் தேடவேண்டா; இருந்தபடியே அதிகாரியாமித்தனை.

31. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

http://acharya.org

32. அதிகாரிநியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில், தர்மபுத்ராதிகளும், த்ரௌபதியும், காகமும், காளியனும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானும், ஸ்ரீவிபீஷணாழ்வானும், பெருமாளும், இளையபெருமாளும் தொடக்கமானவர்கள் சரணம் புகுருகையாலே அதிகாரிநியமமில்லை.

33. பலநியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில்; தர்மபுத்ராதிகளுக்கு பலம் ராஜ்யம்; த்ரௌபதிக்கு பலம் வஸ்த்ரம்; காகத்துக்கும் காளியனுக்கும் பலம் ப்ராணம்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு பலம் கைங்கர்யம்; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு பலம் ராமப்ராப்தி; பெருமாளுக்கு பலம் ஸமுத்ரதரணம்; இளையபெருமாளுக்கு பலம் ராமாநுவ்ருத்தி.

34. விஷயநியமமாவது குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை; பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.

35. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே.

36. "பூர்ணம்" என்கையாலே யெல்லாகுணங்களும் புஷ்கலங்கள்.

37. ப்ரபத்திக்கபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே.

38. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையுங் குலைத்துக்கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தானாதரித்து நிற்கிறவிடம்.

39. பூகதஜலம்போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம்போலே பரத்வம்; பாற்கடல்போலே வ்யூஹம்; பெருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்.

40. இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே, விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக்கடவதாய், ருசிபிறந்தாலுபாயமாய், உபாயபரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

41. இதில் ப்ரபத்திபண்ணு மதிகாரிகள் மூவர்.

42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திபரவசரும்.

43. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

44. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப்பற்ற.

45. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றிவரும்.

46. "என்னான் செய்கேன்" என்கிறவிடத்தில் இம்மூன்றுமுண்டு.

47. அங்கொன்றைப்பற்றி யிருக்கும்.

http://acharya.org

48. முக்ய மதுவே.

49. “ அவித்யாத: ” என்கிற ச்லோகத்திலே இம்மூன்றும் சொல்லிற்று.

50. “ இதம் சரணமஜ்ஞாநாம். ”

51. பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இதுதான் குலையக்கடவதாயிருக்கும்.

52. தன்னைப்பேணவும்பண்ணும் தரிக்கவும்பண்ணும்.

53. இந்த ஸ்வபாவ விசேஷங்கள் கல்யாண குணங்களிலும் திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழலோசையிலுங் காணலாம்.

54. இது தன்னைப்பார்த்தால் பிதாவுக்குப் புத்ரனெழுத்துவாங்குமாபோலே யிருப்பதொன்று.

55. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறுதொழிகை.

56. அங்கம் தன்னையொழிந்தவற்றைப் பொறுதொழிகை.

57. உபாயம் தன்னைப்பொறுக்கும்.

58. உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்.

59. இதிரண்டையும் பொறுது.

60. பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

61. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

62. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ப்ரமித்து அத்தை விளைத்துக்கொள்ளாதொழிகையே வேண்டுவது.

63. ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே.

64. எல்லா வுபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்ய கார்யமாகையாலும், ப்ராப்திதசையிலு மநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகியல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்த வேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாது.

65. அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம், உபாயத்திலுபகாரஸ்ம்ருதியும் உபேயத்திலுகப்பும்.

66. “ உன்மனத்தாலென்னினைந்திருந்தாய் ” என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு.

67. அதுதானெப்போது முண்டு.

68. அது பலிப்பது இவன்னினைவு மாறினால்.

69. “ அந்திம காலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென் என்கிற நினைவு குலைகை ” என்று ஜீயரருளிச்செய்வர்.

70. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானு மவனே.

71. ஸ்வயத்ந நிவ்ருத்தி பாரதந்த்ர்ய பலம்; ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி சேஷத்வ பலம்.

72. பரப்ரயோஜந ப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம்; தத்விஷயப்ரீதி சைதந்ய பலம்.

http://acharya.org

73. அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்.

74. இதுதான் வந்தேறியன்று.

75. ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும் வந்தேறி.

76. சேஷத்வவிரோதி ஸ்வாதந்த்ர்யம்; தச்சேஷத்வவிரோதி ததிதரசேஷத்வம்.

77. அஹங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக் கழியாதபேர் அடியானென்றிறே.

78. க்ராமகுலாதிகளால் வரும்பேர் அநர்த்தஹேது.

79. "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:"

80. உபாயத்துக்கு, பிராட்டியையும் த்ரௌபதியையும் திருக்கண்ணமங்கையாண்டானையும்போலே யிருக்கவேணும்; உபேயத்துக்கு, இளையபெருமாளையும் பெரியவுடையாரையும் பிள்ளைதிருநறையூரரையரையும் சிந்தயந்தியையும்போலே யிருக்கவேணும்.

81. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி, சக்தியும் அசக்தியும்.

82. பிராட்டி ஸ்வசக்தியைவிட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையைவிட்டாள்; திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்.

83. பசியராயிருப்பார் அட்டசோறு முண்ணவேணும் அடுகிறசோறு முண்ணவேணு மென்னுமாபோலே, காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரிவில்தரியாமையை முன்னிட்டு, அடிமைசெய்யவேணும் எல்லாவடிமையும் செய்யவேணும் எனிக்கொள்ளவும் வேணும் என்றார்; படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப்பெருக்கினபடியாலே, ஒப்பூணுண்ணமாட்டாதே, ஒரு திருக்கையாலே திருவெண் கொற்றக்குடையையும், ஒரு திருக்கையாலே திருவெண் சாமரத்தையும் தரித்தடிமைசெய்தார்.

84. பெரியவுடையாரும் பிள்ளைதிருநறையூரரையரும் உடம்பை யுபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக் குடம்பு தன்னடையே போயிற்று.

85. உபாயத்துக்கு,சக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலையவேணும்; உபேயத்துக்கு ப்ரேமமும் தன்னைப் பேணாமையும் தரியாமையும் வேணும்.

86. இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது, ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்கவொண்ணாதிறே.

87. உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம்; உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்.

http://acharya.org

88. அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனானவன் அநுபவிக்கவேணும் என்றிராநின்றால், ப்ராப்தவிஷயப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே.

89. அநுஷ்டாநமும் அநநுஷ்டாநமும் உபாய கோடியிலந்வயியாது.

90. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணாநின்றோமிறே.

91. ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சுபெறும்.

92. உபாய பலமாய் உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது உபாய ப்ரதிபந்தகமாகாது.

93. ஸாத்ய ஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸாதநத்துக்கேற்றம்; ஸாத்ய ப்ராவண்யமடியாகவிறே ஸாதநத்திலிழிகிறது.

94. இவனுக்குப் பிறக்குமாத்மகுணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாந ஹேது இந்த ப்ராவண்யம்.

95. "மாற்பால் மனஞ் சுழிப்ப," "பரமாத்மநி யோ ரக்தஃ" "கண்டு கேட்டுற்று மோந்து."

96. ஆத்மகுணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்.

97. இவையிரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுரும்; ஈச்வரன் கைபுகுந்தவாறே, "வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" என்கிறபடியே ப்ராப்ய பூமி கைபுகுரும்.

98. ப்ராப்யலாபம் ப்ராபகத்தாலே; ப்ராபகலாபம் திருமந்த்ரத்தாலே; திருமந்த்ரலாபம் ஆசார்யனாலே; ஆசார்யலாபம் ஆத்மகுணத்தாலே.

99. இதுதான் ஐச்வர்யகாமர்க்கும் உபாஸகர்க்கும் ப்ரபந்நர்க்கும் வேணும்.

100. மூவரிலும் வைத்துக்கொண்டு மிகவும் வேண்டுவது ப்ரபந்நனுக்கு.

101. மற்றையிருவர்க்கும் நிஷித்தவிஷய நிவ்ருத்தியே அமையும்; ப்ரபந்நனுக்கு விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம்.

102. இதுதான் சிலர்க்கழகாலே பிறக்கும்; சிலர்க்கருளாலே பிறக்கும்; சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்.

103. பிறக்கும் க்ரமமென் என்னில்; அழகு அஜ்ஞாநத்தை விளைக்கும்; அருள் அருசியை விளைக்கும்; ஆசாரம் அச்சத்தை விளைக்கும்.

104. இவையு மூற்றத்தைப் பற்றச்சொல்லுகிறது.

105. அருசி பிறக்கும்போதைக்கு தோஷதர்சந மபேக்ஷிதமாயிருக்கும்.

http://acharya.org

106. அது ப்ரதாந ஹேதுவன்று.

107. அப்ராப்ததையே ப்ரதாந ஹேது.

108. பகவத் விஷயத்திலிழிகிறதும் குணங்கண்டன்று; ஸ்வரூப ப்ராப்தமென்று.

109. இப்படி கொள்ளாதபோது, குணஹீநமென்று நினைத்த தசையில் பகவத்விஷய ப்ரவ்ருத்தியும், தோஷாநுஸந்தாநதசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியும் கூடாது.

110. “ கோடியவென்னெஞ்சமவனென்றேகிடக்கும் ” “ அடியேன் நான் பின்னுமுன் சேவடி யன்றி நயவேன் ” என்னாநின்றார்களிறே.

111. குணக்ருத தாஸ்யத்திலுங்காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம்.

112. அநஸூயைக்குப் பிராட்டியருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

113. பகவத்விஷய ப்ரவ்ருத்தி பின்னைச் சேருமோ வென்னில், அதுக்கடி ப்ராவண்யம்; அதுக்கடி ஸம்பந்தம்; அதுதான் ஔபாதிகமன்று; ஸத்தாப்ரயுக்தம்.

114. அந்தஸத்தை ப்ராவண்ய கார்யமான வநுபவமில்லாதபோது குலையும்; அது குலையாமைக்காக வருமவையெல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாயிருக்கும்; ஆகையாலே பகவத்விஷய ப்ரவ்ருத்தி சேரும்.

ப்ரதமப்ரகரணம் ஸம்பூர்ணம்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.



http://acharya.org

ஸ்ரீமல்லோககுரவே நம:

# ஸ்ரீவசனபூஷணம்.

## இரண்டாம் ப்ரகரணம்.

115. ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாந ஹேது.

116. ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்குபாயம்.

117. ஜ்ஞாநிகளுக்கபாயம்.

118. அபாயமாய்த்தது ஸ்வரூப நாசகமாகையாலே.

119. "நெறிகாட்டி நீக்குதியோ" என்னுநின்றதிறே.

120. "வர்த்ததே மே மஹத்பயம்" என்கையாலேபயஜநகம்; "மா சுச:" என்கையாலே சோக ஜநகம்.

121. இப்படி கொள்ளாதபோது ஏகப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்தவிதி கூடாது.

122. திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணிக்கும்படி—மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம்போலே அஹங்கார மிச்ரமான வுபாயாந்தரம்.

123. ரத்நத்துக்குப் பலகறைபோலேயும் ராஜ்யத்துக்கு எலுமிச்சம்பழம் போலேயும் பலத்துக்கு ஸத்ருசமன்று.

124. தான் தரித்ராகையாலே தனக்குக் கொடுக்கலாவதொன்றில்லை.

125. அவன் தந்தத்தைக் கொடுக்குமிடத்தில், அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம்; அடைவுகெடக் கொடுக்கில் களவு வெளிப்படும்.

126. பர்த்ருபோகத்தை வயிறு வளர்க்கைக் குறுப்பாக்குமாபோலே, இருவர்க்கு மவத்யம்.

127. வேதாந்தங்களுபாயமாக விதிக்கிறபடியென் என்னில்;

128. ஔஷதஸேவை பண்ணுதவர்களுக்கு அபிமத வஸ்துக்களிலே அத்தைக் கலசியிடுவாரைப்போலே ஈச்வரனைக் கலந்து விதிக்கிறவித்தனை.

129. இத்தை ப்ரவர்த்திப்பித்தது பாஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக.

130. இதுதான் பூர்வவிஹிதஹிம்ஸைபோலே; விதிநிஷேதங்களிரண்டுக்கும் குறையில்லை.

http://acharya.org

131. அத்தை சாஸ்த்ர விச்வாஸத்துக்காக விதித்தது. இத்தை ஸ்வரூப விச்வாஸத்துக்காக விதித்தது.

132. அது தோல்புரையேபோம்; இது மர்மஸ்பர்சி.

133. இதுதான் கர்மஸாத்ய மாகையாலே துஷ்கரமுமாயிருக்கும்.

134. ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை.

135. ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநகார்ய மாகையாலே, ஸ்வரூபத்துக்கு உசிதமுமாய், "சிற்ற வேண்டா" என்கிறபடியே நிவ்ருத்தி ஸாத்ய மாகையாலே ஸுகரமுமாயிருக்கும்.

136. பூர்ண விஷயமாகையாலே பெருமைக்கிடாகப் பச்சையிட வொண்ணாது.

137. ஆபிமுக்ய ஸூசகமாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும்.

138. பூர்த்தி கைவாங்காதே மேல்விழுகைக்கு ஹேது வித்தனை.

139. "பத்ரம் புஷ்பம்" "அந்யத் பூர்ணாத்" "புரிவதுவும் புகை பூவே."

140. புல்லைக்காட்டி யழைத்துப் புல்லையிடுவாரைப்போலே பலஸாதநங்களுக்கு பேதமில்லை.

141. ஆகையாலே ஸுகரூபமாயிருக்கும்.

142. இவனவனைப்பெற நினைக்கும்போது இந்த ப்ரபத்தியுமுபாயமன்று.

143. அவனிவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று.

144. இவையிரண்டும் ஸ்ரீபரதாழ்வான் பக்கலிலும் ஸ்ரீகுஹப்பெருமாள் பக்கலிலும் காணலாம்.

145. ஸ்ரீபரதாழ்வானுக்கு, நன்மைதானே தீமையாய்த்து; ஸ்ரீகுஹப்பெருமாளுக்குத் தீமைதானே நன்மையாய்த்து.

146. ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராத கோடியிலேயாய் க்ஷாமணம்பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே.

147. நெடுநாளந்யபரையாய்ப் போந்த பார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே பர்த்ருஸகாசத்திலே நின்று என்னையங்கீகரிக்க வேணுமென்றபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்றிறே யிவன் பண்ணும் ப்ரபத்தி.

148. க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்திற்காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.

149. இவ்வர்த்தத்தை வேதபுருஷ னபேக்ஷித்தான்.

150. அபேக்ஷாநிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இதுண்டாய்த்து.

151. இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலும் காணலாம்.

152. இருவர் முன்னிடுகிறதும் தந்தாம் குற்றங்களை சமிப்பிக்கைக்காக.

http://acharya.org

153. ஸ்வரூபஸித்தியுமத்தாலே.

154. ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ரியம் இருவர்க்கு முண்டிறே.

155. அநித்யமான விருவர் பாரதந்த்ரியமும் குலைவதும் அத்தாலே.

156. ஸஸாக்ஷிகமாகையாலே இப்பந்தத்தை யிருவராலு மில்லைசெய்யப்போகாது.

157. "என்னை நெகிழ்க்கிலும்" "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய."

158. கர்மணி வ்யுத்பத்தியில் ஸ்வரூபகுணங்களால் வருகிற கர்த்ரு ஸங்கோசராஹித்யத்தை நினைப்பது.

159. அதிகாரித்ரயத்துக்கும் புருஷகார மவர்ஜநீயம்.

160. தனக்குத்தான் தேடும் நன்மை தீமைபோபாதி விலக்காயிருக்கும்.

161. அழுக்கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே.

162. "ஹாரோபி."

163. புண்யம்போலே பாரதந்த்ரியமும் பாராநுபவத்துக்கு விலக்கு.

164. குணம்போலே தோஷநிவ்ருத்தி.

165. ஆபரணம் அநபிமதமாய் அழுக்கு அபிமதமாயிராநின்றதிறே.

166. 'ஸ்நாநம் ரோஷ ஜநகம்' என்கிற வார்த்தையை ஸ்மரிப்பது.

167. "வஞ்சக்கள்வன்" "மங்கவோட்டு."

168. வேர்சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்.

169. பரமார்த்தனான விவனுடைய சரீரஸ்திதிக்குஹேது கேவல பகவதிச்சையிறே.

170. "திருமாலிருஞ்சோலை மலையே" என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைகதேசத்திலே பண்ணும்.

171. அங்குத்தைவாஸம் ஸாதநம்; இங்குத்தைவாஸம் ஸாத்யம்.

172. "கல்லும் கனைகடலும்" என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றிலாதரம் மட்டமாயிருக்கும்.

173. "இளங்கோயில் கைவிடேல்" என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாயிருக்கும்.

174. ப்ராப்யப்ரீதிவிஷயத்வத்தாலும் க்ருதஜ்ஞதையாலும் பின்பவை அபிமதங்களாயிருக்கும்.

175. ஆகையாலே தோஷ நிவ்ருத்திபோலே ஆந்தர குணமும் விரோதியாயிருக்கும்.

176. தோஷ நிவ்ருத்திதானே தோஷமாமிறே.

177. "தன்னால் வரும் நன்மை விலைப்பால்போலே; அவனால் வரும் நன்மை முலைப்பால்போலே" என்று பிள்ளான் வார்த்தை.

http://acharya.org

178. அவனை யொழியத்தான் தனக்கு நன்மை தேடுகையாவது—ஸ்தநந்தயப்ரஜையை மாதா பிதாக்கள்கையில் நின்றும் வாங்கி (வா) காதுகனை ஆட்டுவாணியன் கையிலே காட்டிக்கொடுக்குமா போலே யிருப்பதொன்று.

179. தன்னைத்தானேயிறே முடிப்பான்.

180. தன்னைத்தானே முடிக்கையாவது—அஹங்காரத்தையும் விஷயங்களையும் விரும்புகை.

181. அஹங்கார மக்நிஸ்பர்சம் போலே.

182. "ந காமகலுஷம் சித்தம்" "நஹிமே ஜீவிதேநார்த்தः" "ந தேஹம்" "எம்மாவீட்டுத் திறமும்."

183. ப்ரதிகூல விஷயஸ்பர்சம் விஷஸ்பர்சம் போலே, அநுகூல விஷயஸ்பர்சம் விஷமிச்ர போஜனம் போலே.

184. அக்நிஜ்வாலையை விழுங்கி விடாய் கெட நினைக்குமாபோலேயும் ஆடுகிற பாம்பின் நிழலிலே யொதுங்க நினைக்குமாபோலேயும், விஷயப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை.

185. அசனாயா முடியுமாபோலே பகவதநுபவைக பரனாய் ம்ருதுப்ரக்ருதியாயிருக்குமவன் விஷய தர்சநத்தாலே முடியும்படி.

186. "காட்டிப்படுப்பாயோ" என்னக் கடவதிறே.

187. அஜ்ஞனான விஷயப்ரவணன் கேவல நாஸ்திகனைப்போலே; ஜ்ஞானவானான விஷயப்ரவணன் ஆஸ்திக நாஸ்திகனைப்போலே.

188. கேவல நாஸ்திகனைத் திருத்தலாம்; ஆஸ்திக நாஸ்திகனை யொருநாளும் திருத்தவொண்ணாது.

189. இவையிரண்டும் ஸ்வரூபனை முடிக்குமளவன்றிக்கே பாகவத விரோதத்தையும் விளைத்து முடிக்கும்.

190. நாமரூபங்களையுடையராய் பாகவத விரோதம் பண்ணிப் போருமவர்கள் தத்தபடம் போலே.

191 மடிபுடவை வெந்தால் உண்டையும் பாவுமொத்துக் கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம்.

192. "ஈச்வரனவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை" என்று ஜீயரருளிச் செய்வர்.

193. "அவமாநக்ரியா."

194. பாகவதாபசாரந்தான் அநேகவிதம்.

195. அதிலே யொன்று அவர்கள் பக்கல் ஜந்மநிரூபணம்.

196. இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதாந ஸ்ம்ருதியிலுங்காட்டில் க்ரூரம்.

197. அத்தை மாத்ருயோநி பரீக்ஷையோடொக்கும் என்று சாஸ்த்ரம் சொல்லும்.

http://acharya.org

198. த்ரிசங்குவைப்போலே கர்மசண்டாலனை மார்விலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய் விடும்.

199. ஜாதி சண்டாலனுக்கு காலாந்தரத்திலே பாகவதனாகைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை யிவனுக்கு.

200. ஆரூடபதிதனாகையாலே.

201. இதுதனக்கு அதிகாரி நியமமில்லை.

202. "தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும்" என்கையாலே.

203. இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும் பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது.

204. ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே யமைகிறாப்போலே அவையுண்டானாலு மிழவுக்கவர்கள் பக்கல் அபசாரமே போரும்.

205. இதில் ஜன்ம வ்ருத்தாதி நியமமில்லை.

206. இவ்வர்த்தம் கைசிக வ்ருத்தாந்தத்திலும், உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலும் காணலாம்.

207. ப்ராஹ்மண்யம் விலைச்செல்லுகிறது. வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாப ஹேதுவென்று; அதுதானே யிழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே.

208. ஜன்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கு மிழவுக்கு மப்ரயோஜகம்.

209. ப்ரயோஜகம் பகவத் ஸம்பந்தமும் ததஸம்பந்தமும்.

210. பகவத் ஸம்பந்தமுண்டானா லிரண்டு மொக்குமோ என்னில்.

211. ஒவ்வாது.

212. உத்க்ருஷ்டமாகப்ரமித்த ஜன்மம் ப்ராம்சஸம்பாவனையாலே "சீரேச" என்கிறபடியே பயஜநகம்.

213. அதுக்கு ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்கவேணும்.

214. அபக்ருஷ்டமாகப்ரமித்த உத்க்ருஷ்ட ஜன்மத்துக்கு இரண்டுதோஷமுமில்லை.

215. நைச்யம் ஜன்மஸித்தம்.

216. ஆகையாலே உத்க்ருஷ்ட ஜன்மமே ச்ரேஷ்டம்.

217. "ச்வபசோபி மஹீபால."

218. நிக்ருஷ்ட ஜன்மத்தால் வந்த தோஷம் சமிப்பது விலக்ஷண ஸம்பந்தத்தாலே.

219. ஸம்பந்தத்துக்கு யோக்யதை யுண்டாம்போது ஜன்மக் கொத்தை போகவேணும்.

http://acharya.org

220. ஜந்மத்துக்குக் கொத்தையும் அதுக்குப் பரிஹாரமும் "பழுதிலா வொழுகல்" என்கிறபாட்டிலே யருளிச்செய்தார்.

221. வேதகப் பொன்போலே யிவர்களோட்டை ஸம்பந்தம்.

222. இவர்கள்பக்கல் ஸாம்யபுத்தியு மாதிக்ய புத்தியும் நடக்க வேணும்.

223. அதாவது—ஆசார்யதுல்யரென்றும் ஸம்ஸாரிகளிலும் தந்நிலு மீச்வரனிலும் அதிகரென்றும் நினைக்கை.

224. ஆசார்ய ஸாம்யத்துக்கடி ஆசார்யவசநம்.

225. இப்படி நினையாதொழிகையு மபசாரம்.

226. இவ்வர்த்தம் இதிஹாஸ புராணங்களிலும் * பயிலுஞ்சுடரொளி நெடுமாற்கடிமையிலும் கண்சோர வெங்குருதியிலும் நண்ணாதவாளவுணரிலும் தேட்டருந்திறற்தேனிலும், மேம்பொருளுக்கு மேலில் பாட்டுக்களிலும் விசதமாகக் காணலாம்.

227. க்ஷத்ரியனான விச்வாமித்ரன் ப்ரஹ்மர்ஷியானான்.

228. விபீஷணனை ராவணன் குலபாம்ஸநனென்றான்; பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யனாக நினைத்து வார்த்தை யருளிச்செய்தார்.

229. பெரிய வுடையார்க்குப் பெருமாள் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணி யருளினார்.

230. தர்மபுத்ரர் அசரீரிவாக்யத்தையும் ஜ்ஞாநாதிக்யத்தையும் கொண்டு ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.

231. ருஷிகள் தர்மவ்யாதன் வாசலிலே துவண்டு தர்ம ஸந்தேஹங்களை சமிப்பித்துக் கொண்டார்கள்.

232. க்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதிகள் க்ருஹங்களைவிட்டு ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே யமுது செய்தான்.

233. பெருமாள் ஸ்ரீசபரி கையாலே யமுதுசெய்தருளினார்.

234. மாறனேரிநம்பி விஷயமாகப் பெரியநம்பி உடையவர்க் கருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

235. "ப்ராதுர்ப்பாவை:" இத்யாதி.

236. பாகவதனன்றிக்கே வேதார்த்த ஜ்ஞாநாதிகளை யுடையவன் குங்குமம் சுமந்த கழுதையோபாதி யென்று சொல்லாநின்றதிறே.

237. ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாள் திர்யக்ஸ்தாவர ஜந்மங்களை யாசைப்பட்டார்.

238. ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோபஜந்மத்தை யாஸ்தாநம் பண்ணினார்கள்.

239. கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாமுத்தமையுடைய அவஸ்தை வரக்கடவதாயிருக்கும்.

http://acharya.org

240. ஆறுப்ரகாரத்தாலே பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு தத்ஸாம்யமுண்டாயிருக்கும்.

241. த்ருஷ்டத்தி லுத்கர்ஷ மஹங்காரத்தாலே; அத்ருஷ்டத்தி லுத்கர்ஷ மஹங்கார ராஹித்யத்தாலே.

242. ப்ரஹ்மாவாயிழந்துபோதல் இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யும்படியாயிருக்கும்.

243. இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாசஹேதுவான வஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷய ப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே தன்னைக்கண்டால் சத்ருவைக் கண்டாப்போலேயும்; அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாப்போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் பந்துக்களைக் கண்டாப்போலேயும்; ஈச்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாப்போலேயும்; ஆசார்யனைக் கண்டால், பசியன் சோற்றைக் கண்டாப்போலேயும்; சிஷ்யனைக் கண்டால் அபிமதவிஷயத்தைக் கண்டாப்போலேயும் நினைத்து, அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும் அநுகூலர் பக்கலநாதரத்தையும் ப்ரதிகூலர் பக்கல் ப்ராவண்யத்தையும் உபேக்ஷிக்குமவர்கள்பக்க லபேக்ஷையையும் பிறப்பிக்கு மென்றஞ்சி, ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக் கொள்ளவொண்ணாது, ஸதாசார்ய ப்ரஸாதமடியாகவருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்குமத்தனையென்று துணிந்து தேஹயாத்ரையிலுபேக்ஷையும் ஆத்மயாத்ரையி லபேக்ஷையும் ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்தி நிவ்ருத்தியும் தேஹதாரணம் பரமாத்ம ஸமாராதன ஸமாப்தி ப்ரஸாத ப்ரதிபத்தி யென்கிற புத்தி விசேஷமும், தனக்கொரு க்லேசமுண்டானால் கர்மபல மென்றுதல் க்ருபாபல மென்றுதல் பிறக்கும் ப்ரீதியும் ஸ்வாநுஷ்டானத்தில் ஸாதநத்வ புத்தி நிவ்ருத்தியும்; விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களில் வாஞ்சையும் உகந்தருளின நிலங்களிலாதராதிசயமும், மங்களாசாஸநமும், இதர விஷயங்களில் அருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தந நியதியும், ஆஹார நியதியும் அநுகூல ஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்.

இரண்டாம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# த்ருதீயப்ரகரணம்.

244. மங்களாசாஸநம் ஸ்வரூப விருத்தமன்றோ வென்னில்; ஜ்ஞாநதசையில் ரக்ஷ்யரக்ஷக பாவம் தன்கப்பிலே கிடக்கும்; ப்ரேமதசையில் தட்டுமாறிக் கிடக்கும்.

245. அவன்ஸ்வரூபத்தை யநுஸந்தித்தால் அவனைக் கடகாகக்கொண்டு தன்னை நோக்கும், ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்தால் தன்னைக் கடகாகக்கொண் டவனைநோக்கும்.

246. இவ்வர்த்தம் சக்ரவர்த்தி ஸ்ரீஜநகராஜன் திருமகள் விச்வாமித்ரன் ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ருஷிகள் திருவடி மஹாராஜர், ஸ்ரீநந்தகோபர் ஸ்ரீவிதுரர் பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம்.

247. இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாளதிசங்கை பண்ண இருவரையுமதிசங்கை பண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே.

248. ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்றிது.

249. இவர்கள் நம்முடைய கோடியிலே யென்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை.

250. ஆழ்வார்களெல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார்.

251. அவர்களுக்கிது காதாசித்கம்; இவர்க்கிது நித்யம்.

252. அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்கு மேடாயிருக்கும்.

253. அவர்களுக்கு உபய சேஷத்வத்தையு மழித்து ஸ்வரூபத்தைக் குமிழ்நீருண்ணப்பண்ணுமது, இவர்க்கு உபய வ்ருத்திக்கும் ஹேதுவாய் ஸ்வரூபத்தைக் கரையேற்றும்.

254. பய நிவர்த்தகங்களுக்கு பயப்படுவது ப்ரதிகூலரையு மநுகூலராக்கிக் கொள்ளுவது, அதீத காலங்களிலபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரிவது ப்ராப்திபலமு மிதுவே யென்பது அநிமிஷரைப்பார்த்து உறகலுறகல் என்பதாய்க்கொண்டு இதுதானே யாத்ரையாய் நடக்கும்.

255. அல்லாதவர்களைப் போலே கேட்கிறவர்களுடையவும் சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கையன்றிக்கே ஆளுமாளாரென்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காகவாயிற்று பாஷ்யகாரரு மிவருமுபதேசிப்பது.



http://acharya.org

256. அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்திகள் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே; இவர்க்கு மங்களாசாஸநத்தாலே.

257. உகந்தருளின நிலங்களை யநுஸந்தித்தால் ஊணுமுறக்கமு மின்றிக்கே இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாக வேணும்.

258. ஆகையாலே மங்களாசாஸநம் ஸ்வரூபாநுகுணம்.

259. அநுகூலராகிறார் ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் இட்டுமாறினப்போலே, வடிவிலே தொடை கொள்ளலாம்படி யிருக்கும் பரமார்த்தர்.

260. ஒரு செய் நிரம்ப நீர் நின்றால் அசல்செய் பொசிந்து காட்டுமா போலே இவையில்லாதார்க்கு மிவர்களோட்டை ஸம்பந்தத்தாலே உருவுதல் நீரக்கடவதாயிருக்கும்.

261. ஆறுநீர் வரவணித்தானால் அதுக்கீடான வடையாளங்களுண்டாமா போலே ப்ராப்தி யணித்தானவாறே இந்த ஸ்வபாவ விசேஷங்கள் தன்னடையே விளையக்கடவதாயிருக்கும்.

262. இவற்றைக்கொண்டு சரம சரீரமென்று தனக்குத்தானே யறுதியிடலாயிருக்கும்.

263. ப்ரதிகூலராகிறார் தேஹாத்மாபிமாநிகளும் ஸ்வதந்த்ரரு மந்யசேஷ பூதரு முபாயாந்தரநிஷ்டரும் ஸ்வப்ரயோஜநபரரும்.

264. இவர்களுக்குஉத்தேச்யரும் உபாயோபேயங்களும் பேதித்திருக்கும்.

265. தேஹாத்மாபிமானிகளுக்குஉத்தேச்யர் தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயமர்த்தம், உபேயமைஹிகபோகம்; ஸ்வதந்த்ரர்க்கு உத்தேச்யர் ஸ்வர்க்காதிபோகப்ரதர், உபாயம் கர்மாநுஷ்டாநம்; உபேயம் ஸ்வர்க்காதி போகம், அந்ய சேஷபூதர்க்கு உத்தேச்யர் ப்ரஹ்மருத்ராதிகள், உபாயம் தத்ஸமாச்ரயணம், உபேயம் தத்ஸாயுஜ்யம்; உபாயாந்தரநிஷ்டர்க்கு உத்தேச்யன் தேவதாந்தர்யாமியான ஸர்வேச்வரன், உபாயம் கர்மஜ்ஞாநபக்திகள், உபேயம் பகவதநுபவம்; ஸ்வப்ரயோஜநபரர்க்குஉத்தேச்யன் நெஞ்சினால் நினைப்பானெவனென்கிறவன்; உபாயம் ஸ்வகீய ஸ்வீகாரம், உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம்.

266. முதல் சொன்ன மூவரும் நிக்ரஹத்துக் கிலக்கு, மற்றையிருவரு மநுக்ரஹத்துக் கிலக்கு.

267. மூவருடையவும் கர்ம மநுபவ விநாச்யம், நாலாமதிகாரிக்கு ப்ராயச்சித்த விநாச்யம்; அஞ்சாமதிகாரிக்குப் புருஷகார விநாச்யம்.

268. உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகார ஸாபேக்ஷமுமாய் இருக்கும்; கார்யகாலத்தி லுபயநிரபேக்ஷமாயிருக்கும்.

http://acharya.org

269\. ஸ்வப்ரயோஜநபர ரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில்;

270\. இங்கு ஸ்வப்ரயோஜந மென்கிறது ஆச்ரயதோஷ ஜந்யமான த்தை.

271\. ஆகையாலே தோஷமில்லை.

272\. விஷய தோஷத்தால் வருமவையெல்லாம் துஸ்த்யஜமாயிறே யிருப்பது.

273\. "ஊமையரோடு செவிடர் வார்த்தை" "கதமந்ய திச்சதி."

274\. இப்படி யிவை யித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு வஸ்தவ்யமாசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும்; வக்தவ்யமாசார்ய வைபவமும் ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்; பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமுமநுஷ்டாநமும், பரித்யாஜ்ய மவைஷ்ணவ ஸஹவாஸமு மபிமாநமும்; கர்த்தவ்ய மாசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்.

275\. கீழ்ச்சொன்ன பகவத் கைங்கர்ய மறிவது சாஸ்த்ரமுகத்தாலே. ஆசார்ய கைங்கர்ய மறிவது சாஸ்த்ரமுகத்தாலு மாசார்ய வசநத்தாலும்.

276\. கைங்கர்யந்தானிரண்டு.

277\. அதாவது இஷ்டம் செய்கையு மநிஷ்டம் தவிருகையும்.

278\. இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களையு மாத்மஸ்வரூபத்தையு மவலம்பித்திருக்கும்.

279\. புண்யத்துக் கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணுனிறே.

280\. இவன் புண்யத்தைப் பாபமென்றிருக்கும்; அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும். அவனுக்கது கிடையாது; இவனது செய்யான்.

281\. கைங்கர்யந்தான் பக்திமூல மல்லாதபோது பீதிமூலமாய் வரவேணும்.

282\. அதுவுமில்லாதபோது அதிகாரத்திலும் உபாயோபேயங்களிலும் அந்வயமின்றிக்கே யொழியும்.

283\. கைங்கர்யந்தன்னை பலஸாதநமாக்காதே பலமாக்கவேணும்.

284\. அதாவது—தான் கையேலாதே அவனைக் கையேற்கப் பண்ணுகை.

285\. கொடுத்துக் கொள்ளாதே கொண்டத்துக்குக் கைக்கூலி கொடுக்கவேணும்.

286\. ஸ்ரீவிதுரரையும், ஸ்ரீமாலாகாரரையும் கூனியையும் போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது.

287\. மடிதடவாத சோறும் சுருளாளுத பூவும் சுண்ணாம்பு படாத சாந்துமிறே யிவர்கள் கொடுத்தது.

288\. கைங்கர்ய தசைபோலே முன்புள்ள தசைகளிலும் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கவேணும்.

http://acharya.org

289. முன்பே நாலு தசை யுண்டு.

290. அதாவது ஜ்ஞாநதசையும் வரண தசையும் ப்ராப்தி தசையும் ப்ராப்யாநுபவ தசையும்.

291. ஜ்ஞாநதசையில் அஜ்ஞாநத்தை முன்னிடும்; வரண தசையில் அபூர்த்தியை முன்னிடும். ப்ராப்தி தசையில் ஆர்த்தியை முன்னிடும்; ப்ராப்யாநுபவ தசையி லபிநிவேசத்தை முன்னிடும்.

292. அஜ்ஞாநம் போவது ஆசார்யஜ்ஞாநத்தாலே, அபூர்த்திபோவது ஈச்வர பூர்த்தியாலே; ஆர்த்திபோவது அருளாலே; அபிநிவேசம் போவது அநுபவத்தாலே.

293. அஜ்ஞானத்துக்கடி அபராதம், அபூர்த்திக்கடி ஜ்ஞாநபூர்த்தி, ஆர்த்திக்கடி அலாபம்; அபிநிவேசத்துக்கடி அழகு.

294. ஆர்த்தியு மபிநிவேசமு மிருக்கும்படி அர்ச்சிராதிகதியிலே சொன்னோம்.

295. இவன் தனக்கு நாலு தசைபோலே நாலுகுண முண்டு.

296. அதாவது ஜ்ஞாநமு மஜ்ஞாநமும் சக்தியு மசக்தியும்.

297. இதுதா னவனுக்கு முண்டு.

298. அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய குணம்; அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய தோஷம். சக்திக்கிலக்கு இவனுடைய ரக்ஷணம், அசக்திக்கிலக்கு பரித்யாகம்.

299. இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யகுணம்; அஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யதோஷம்; சக்திக்கிலக்கு ஆசார்ய கைங்கரியம், அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்.

300. நிஷித்தந்தானும் நாலுபடியாயிருக்கும்.

301. அதாவது அக்ருத்யகரணமும் பகவதபசாரமும் பாகவதாபசாரமும் அஸஹ்யாபசாரமும்.

302. அக்ருத்யகரணமாவது—பரஹிம்ஸை பரஸ்தோத்ரம் பரதார பரிக்ரஹம் பரத்ரவ்யாபஹாரம் அஸத்ய கதநம் அபக்ஷ்ய பக்ஷணம் தொடக்கமானவை.

303. பகவதபசாரமாவது—தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கையும் ராமக்ருஷ்ணாத் யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தியும், வர்ணாச்ரம விபரீதமான வ்யபசாரமும், அர்ச்சாவதாரத்தி லுபாதாந நிரூபணமும் ஆத்மாபஹாரமும் பகவத் த்ரவ்யாபஹாரமும் தொடக்கமானவை.

304. பகவத்த்ரவ்யத்தைத் தானபஹரிக்கையும் அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும் அவர்கள் பக்கலிலே யாசிதமாகவு மயாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும் பகவாநுக்கநிஷ்டமாயிருக்கும்.

http://acharya.org

305. பாகவதாபசாரமாவது அஹங்காரார்த்த காமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப்பண்ணும் விரோதம்.

306. அஸஹ்யாபசாரமாவது நிர்நிபந்தநமாக பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமாநனாயிருக்கையும் ஆசார்யாபசாரமும் தத்பக்தாபசாரமும்.

307. இவை யொன்றுக்கொன்று க்ரூரங்களுமாய் உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமாயிருக்கும்.

308. தான் ஹிதோபதேசம் பண்ணும்போது தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்.

309. தன்னை மாறாடி நினைக்கையாவது தன்னை ஆசார்யனென்று நினைக்கை; சிஷ்யனை மாறாடி நினைக்கையாவது தனக்கு சிஷ்யனென்று நினைக்கை. பலத்தை மாறாடி நினைக்கையாவது த்ருஷ்ட ப்ரயோஜநத்தையும், சிஷ்யனுடைய உஜ்ஜீவனத்தையும், பகவத் கைங்கர்யத்தையும் ஸஹவாஸத்தையும் பலமாக நினைக்கை.

310. நினையாதிருக்க இந்நாலு பலமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; சேஷபூதனை சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும்; ஈச்வரன் நினைவாலே உஜ்ஜீவனம் ஸித்திக்கும், ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கரியம் ஸித்திக்கும், உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்.

311. ஸாக்ஷாத்பலமும் ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில், தன் நினைவாலும் ஈச்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.

312. இப்படி யொழிய உபதேசிக்கில் இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தியில்லை.

313. ஆசார்யனுக்கு சிஷ்யன் பக்கல் க்ருபையும் ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ரியமும் வேணும்.

314. க்ருபையாலே சிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும், பாரதந்த்ரியத்தாலே தன் ஸ்வரூபம் ஸித்திக்கும்.

315. நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை.

316. ஸம்ஸார வர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான பகவந் மந்த்ரங்களை யுபதேசித்தவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை.

317. பகவந் மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்கிறது பலத்வாரா.

318. ஸம்ஸாரவர்த்தகங்களென்கிறதும் அத்தாலே.

319. இதுதான் ஔபாதிகம்.

320. சேதநனுடைய ருசியாலே வருகையாலே.

http://acharya.org

321. ஶிஷ்யனென்பது ஸாத்யாந்தர நிவ்ருத்தியும் பலஸாதந ஶுச்ருஷையும், ஆர்த்தியு மாதரமும் அநஸூயையும் உடையவனை.

322. மந்த்ரமும் தேவதையும் பலமும் பலாநுபந்திகளும் பலஸாதநமும் ஐஹிகபோகமுமெல்லா மாசார்யனே யென்று நினைக்கக்கடவன்.

323. "மாதாபிதா யுவதய:" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தைப் பரமாசார்யருமருளிச்செய்தார்.

324. இதுக்கடி உபகார ஸ்ம்ருதி.

325. உபகார ஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்தநிலமீச்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை.

326. ஶிஷ்யனு மாசார்யனும் அந்யோந்யம் ப்ரிய ஹிதங்களை நடத்தக்கடவர்கள்.

327. ஶிஷ்யன் தான் ப்ரியத்தை நடத்தக்கடவன்; ஈச்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன்; ஆசார்யன் மாறுடி நடத்தக்கடவன்.

328. ஶிஷ்யன் உகப்பிலே யூன்றிப்போரும்; ஆசார்ய னுஜ்ஜீவனத்திலே யூன்றிப்போரும்.

329. ஆகையால் ஶிஷ்ய னாசார்யனுடைய ஹர்ஷத்துக்கு இலக்காகை யொழிய ரோஷத்துக் கிலக்காகைக் கவகாசமில்லை.

330. நிக்ரஹத்துக்குப் பாத்ரமாம்போது அது ஹிதரூபமாகையாலே யிருவர்க்கு முபாதேயம்.

331. ஶிஷ்யனுக்கு நிக்ரஹகாரணம் த்யாஜ்யம்.

332. நிக்ரஹந்தான் பகவந் நிக்ரஹம்போலே ப்ராப்யாந்தர்க்கதம்.

333. ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக்கடவன். ஶிஷ்யன் ஆசார்யனுடைய தேஹத்தைப் பேணக்கடவன்.

334. இரண்டுமிருவர்க்கும் ஸ்வரூபமுமாய் பகவத்கைங்கர்யமுமாயிருக்கும்.

335. ஆசார்யனுக்குதேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி;ஶிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூபஹாநி.

336. ஆசார்ய னாத்மரக்ஷணம் பண்ணுமிடத்தி லஹங்காரம் விரோதி; ஶிஷ்யன் தேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி.

337. ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்துவைக்கொண்டு பண்ணக் கடவன். ஶிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன்.

338. ஆசார்யன் ஶிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக் கடவனல்லன்; ஶிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவனல்லன்.

339. கொள்ளில் மிடியனும், கொடுக்கில் கள்ளனும்.

340. கொள் கொடையுண்டானல் ஸம்பந்தம் குலையும்.

341. இவன் மிடியனாகையாலே கொடான், அவன் பூர்ணனாகையாலே கொள்ளான்.

http://acharya.org

342. அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது. இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.

343. ஆனால் சிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணுமுபகாரம் ஒன்றுமில்லையோவென்னில்.

344. ஆசார்யன் நினைவாலே யுண்டு.

345. அதாவது ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள்.

346. ஆசார்யப்ரீத்யர்த்தமாக இவனுக்குத் தவிரவேண்டுவது பகவத் த்ரவ்யத்தை யபஹரிக்கையும் பகவத் போஜநத்தை விலக்குகையும் குருமந்த்ர தேவதா பரிபவமும்.

347. பகவத் த்ரவ்யாபஹாரமாவது ஸ்வாதந்த்ரியமும் அந்ய சேஷத்வமும்; பகவத் போஜநத்தை விலக்குகையாவது அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை.

348. அவனுடைய ரக்ஷகத்வக்ரமம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம். குருபரிபவமாவது கேட்டவர்த்தத்தின்படி யநுஷ்டியாதொழிகையும் அநதிகாரிகளுக்குபதேசிக்கையும்; மந்த்ர பரிபவமாவது அர்த்தத்தில் விஸ்ம்ருதியும் விபரீதார்த்தப்ரதிபத்தியும்; தேவதாபரிபவமாவது கரணத்ரயத்தையு மப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும்.

349. இவனுக்கு சரீராவஸாநத்தளவும் ஆசார்ய விஷயத்தில் "என்னைத் தீமனம் கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்றுஉபகாரஸ்ம்ருதி நடக்கவேணும்.

350. மநஸ்ஸுக்குத் தீமையாவது ஸ்வகுணத்தையும் பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கை.

351. தோஷம் நினையாதொழிகிறது குணம்போலே யுண்டாயிருக்கவன்று, இல்லாமையாலே.

352. தோஷமுண்டென்று நினைக்கில் அது பரதோஷமன்று, ஸ்வதோஷம்.

353. ஸ்வதோஷமானபடி யென்னென்னில்;

354. ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.

355. ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்தி நடக்கும்.

356. நடந்ததில்லையாகில் தோஷஜ்ஞாநமே தோஷமாம்.

357. இது தனக்கவஸரமில்லை.

358. ஸ்வதோஷத்துக்கும் பகவத் பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே.

359. ஸம்ஸாரிகள்தோஷம் ஸ்வதோஷமென்று நினைக்கக்கடவன்.

360. அதுக்கு ஹேது பந்தஜ்ஞாநம்.

http://acharya.org

361. "இறைப்பொழுது மேண்ணோம்" என்கையாலே அதுதான் தோன்றாது.

362. தோன்றுவது நிவர்த்தகார்த்தமாக.

363. பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப்போலே, தனக்குப் பிறர்செய்த குற்றங்களை பகவத் பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவனல்லன்.

364. அறிவிக்க வரியவனாகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்று நின்றதிறே.

365. குற்றம் செய்தவர்கள் பக்கல், பொறையும், க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும்.

366. ஸ்வதோஷாநு ஸந்தாநம் பயஹேது; பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது.

367. பயாபயங்களிரண்டும் மாறுடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்.

368. ஆனால் "நலிவானின்ன மேண்ணுகின்றாய்" "ஆற்றங்கரைவாழ் மரம் போலஞ்சுகின்றேன்" என்கிறபாசுரங்களுக்கு அடியென்னென்னில்;

369. பந்தாநுஸந்தாநம்.

370. ப்ரஜை தெருவிலே யிடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே, நிருபாதிக பந்துவாய் சக்தனுமிருக்கிறவன் விலக்காதொழிந்தால் அப்படிச் சொல்லலாமிறே.

371. ப்ரஜையைக் கிணற்றின் கரையினின்றும் வாங்காதொழிந்தால் தாயே தள்ளினாளென்னக் கடவதிறே.

372. இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேதுவல்லாதாப் போலே அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று.

373. இரண்டு மிருவர்க்கும் ஸ்வரூபம்.

374. இழவுக்கடி கர்மம்; பேற்றுக்கடி க்ருபை.

375. மற்றைப்படி சொல்லில் இழவுக்குறுப்பாம்.

376. எடுக்க நினைக்கிறவனைத் தள்ளினு மென்கை எடாமைக்குறுப்பிறே.

377. சீற்றமுளவென்ற வநந்தரத்திலே யிவ்வர்த்தத்தைத் தாமே யருளிச் செய்தாரிறே.

378. சீற்றமுண்டென்றறிந்தால் சொல்லும்படி யென்னென்னில், அருளும் ஆர்த்தியும் அநந்ய கதித்வமும் சொல்லப்பண்ணும்.

379. சிறிதும் காலைக்கட்டிக் கொள்ளலாம்படி யிருப்பானொருவனைப் பெற்றால் எல்லாம் சொல்லலாமிறே.

380. "க்ருபயா பர்யபாலயத்" "அரிசினத்தால்."

த்ருதீய ப்ரகரணம் ஸம்பூர்ணம்.

---

http://acharya.org

ஸ்ரீரஸ்து.

# சதுர்த்தப்ரகரணம்.

381. க்ரியாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க, அதுஉண்ட துருக் காட்டாதே, தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமாபோலே, ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய், இவர்களைப் பிரிந்தால் ஆற்றமாட்டாதே, இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குக் கரண களேபரங்களைக்கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்தி விசேஷங்களையும் கொடுத்து, கண்காணநிற்கி லாணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே, அகவாயிலே அணைத்துக்கொண்டு, ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்று விடாதே, ஸத்தையை நோக்கி யுடன்கேடனாய், இவர்கள் அஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே, அநுமதி தானத்தைப்பண்ணி உதாஸீநரைப்போலே யிருந்து மீட்கைக்கிடம் பார்த்து, நன்மையென்று பேரிடலாவதொரு தீமையும் காணாதே நெற்றியைக் கொத்திப்பார்த்தாலொருவழியாலும் பசைகாணாதொழிந்தால் அப்ராப்யமென்று கண்ண நீரோடே மீளுவது; தனக்கேற இடம்பெற்ற வளவிலே, என்னூரைச்சொன்னாய் என்பேரைச்சொன்னாய் என்னடியாரை நோக்கினாய் அவர்கள் விடாயைத் தீர்த்தாய் அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்றாப்போலே சிலவற்றை யேறிட்டு, மடிமாங்காயிட்டு, பொன்வாணியன் பொன்னை உரைகல்லிலே யுரைத்து மெழுகாலே யெடுத்துக் கால் கழஞ்சென்று திரட்டுமாபோலே, ஜந்ம பரம்பரைகள்தோறும், யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிக மென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக் கொண்டு தானே யவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்.

382. லலிதா சரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்க மொழியக் காணலாம்.

383. அஜ்ஞான மநுஷ்யர்கள் வாளாதந்தானென்றிருப்பர்கள்.

384. ஜ்ஞானவான்கள் "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்" "எந்நன்றிசெய்தேனோ வென்னெஞ்சில் திகழ்வதுவே" "நடுவேவந்துய்யக்கொள்கின்ற நாதன்" "அறியாதன வறிவித்தவத்தா நீசெய்தன வடியேனறியேனே" "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமை கொண்டாய்" "என்னைத் தீமனங் கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்றீடுபடாநிற்பர்கள்.



http://acharya.org

385. பாஷ்யகாரர் காலத்திலே ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப், பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக முதலிகளெல்லாரும் திரளவிருந்தவளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது.

386. ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக்கொண்டு கடாக்ஷியா நிற்கும்.

387. இவையுங்கூட இவனுக்கு விளையும்படியிறே இவன் தன்னை முதலிலே அவன் ஸ்ருஷ்டித்தது.

388. அதுதன்னை நிரூபித்தால் இவன் தனக்கு ஒன்றும் செய்யவேண்டாதபடியாயிருக்கும்.

389. பழையதாக உழுவது நடுவது விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரிமுளைத்து பலபர்யந்தமாமாபோலே, இவைதான் தன்னடையே விளையும்படி யாயிற்று பக்திபுழுவன் பழம் புனத்தை ஸ்ருஷ்டித்த கட்டளை.

390. அவைதானவை யென்றால் ;

391. பூர்வக்ருத புண்யா புண்ய பலன்களை சிரகாலம் புஜித்து, உத்தர காலத்தில் வாஸனைகொண்டு ப்ரவர்த்திக்குமத்தனை யென்னும்படி கையொழிந்த தசையிலே, நாமார்? நாம் நின்ற நிலையேது? நமக்கினி மேல் போக்கடியேது? என்று பிறப்பன சில நிரூபண விசேஷங்களுண்டு ; அவையாதல் முன்பு சொன்னவையாதல்.

392. "யதாஹி மோக்ஷகாஃ பாங்தே" என்று தொடங்கி இதினுடைய க்ரமத்தை பகவச் சாஸ்த்ரத்திலே சொல்லிற்று.

393. "வேறிதே யருள்செய்வர்" என்றிவ் வர்த்தத்தை ஸ்பஷ்டமாக அருளிச் செய்தாரிறே.

394. "செய்வார்கட்கு" என்று அருளுக்கு ஹேது ஸுக்ருதமென்னு நின்றதே யென்னில் ; அப்போது "வேறிதே" என்கிற விடம் சேராது.

395. பகவதாபிமுக்யம் ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத்க்ருபையாலே பிறக்கிறது, அத்வேஷம் ஸுக்ருதத்தாலே யென்னில் ; இந்த பல விசேஷத்துக்கு அகத்தை ஸாதநமாக்க வொண்ணாது.

396. சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிற வித்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கை யாயிருக்கும்.

397. இவ்வர்த்த விஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பர விருத்தம் போலே தோற்றுமவற்றில் சொல்லுகிற பரிஹாரமும், மற்று முண்டான வக்தவ்யங்களும் விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம்,

http://acharya.org

398. ஆகையால் இவன் விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷிபண்ணின ஈச்வரனை யநுஸந்தித்தால் எப்போதும் நிர்ப்பரனாயே யிருக்கு மித்தனை.

399. "எதிர் சூழல் புக்கு."

400. ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப்போலே வ்யாப்தியும்.

401. ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே ஸ்வார்த்தமாக வென்றிறே ஜ்ஞாநாதிக ளநுஸந்திப்பது.

402. கர்மபலம்போலே க்ருபாபலமு மநுபவித்தே யறவேணும்.

403. க்ருபை பெருகப்புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகையவொண்ணாதபடி யிருகரையுமழியப் பெருகும்.

404. பயஹேது கர்மம்; அபயஹேது காருண்யம்.

405. பயாபயங்களிரண்டும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கும்.

406. நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தக ஜ்ஞாநம் அபயஹேது.

407. ஸ்வதந்த்ரனை உபாயமாகத்தான் பற்றினபோதிறே இப்ரஸங்கந்தானுள்ளது.

408. உண்டபோ தொருவார்த்தையு முண்ணாதபோ தொருவார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே. அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடுவது.

409. அவர்களைச் சிரித்திருப்பா ரொருவருண்டிறே, அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக்கடவோம்.

410. ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே ப்ராபகம்.

411. வடுகநம்பி ஆழ்வானையு மாண்டானையு மிருகரைய ரென்பர்.

412. ப்ராப்யத்துக்கு ப்ரதம பர்வம் ஆசார்ய கைங்கர்யம்; மத்யமபர்வம் பகவத் கைங்கர்யம், சரமபர்வம் பாகவத கைங்கர்யம்.

413. ஸ்வரூப ப்ராப்தியை சாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க, ப்ராப்திபலமாய்க்கொண்டு கைங்கர்யம் வருகிறாப்போலே ஸாத்ய விவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம் வரக்கடவது.

414. இதுதான் துர்லபம்.

415. விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்று, ப்ரதமபர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள வருமை.

416. அங்கு தோஷதர்சநத்தாலே மீளலாம்; இங்கதுசெய்யவொண்ணாது.

417. தோஷமுண்டானாலும் குணம்போலே உபாதேயமாயிருக்கும்.

418. லோகவிபரீதமாயிறே இருப்பது.

http://acharya.org

419. குணம் உபாதேயமாகைக்கீடானஹேது தோஷத்துக்கு முண்டிறே.

420. நிர்க்குணனென்றவாய் மூடுவதற்கு முன்னே குணவானென்று சொல்லும்படியாயிருந்ததிறே.

421. இப்படி சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலேயென்று ஸ்நேஹமும் உபகாரஸ்ம்ருதியும் நடந்ததிறே.

422. நிர்க்குணனாக சங்கித்துச் சொல்லுமவஸ்தையிலும் காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று.

423. குணதோஷங்களிரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையையும் குலைக்கும்.

424. நித்யசத்ருவாயிறே யிருப்பது.

425. இப்படி ப்ராப்யத்தை யறுதியிட்டால் அதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்.

426. அல்லாதபோது ப்ராப்ய ப்ராபகங்களுக்கு ஐக்யமில்லை.

427. ஈச்வரனைப்பற்றுகை கையைப்பிடித்துக் காரியங்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப்பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி.

428. ஆசார்யன் இருவர்க்கும் உபகாரகன்.

429. ஈச்வரனுக்கு சேஷவஸ்துவை யுபகரித்தான்; சேதநனுக்கு சேஷியை யுபகரித்தான்.

430. ஈச்வரன்தானும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டிருக்கும்.

431. ஆகையிறே குருபரம்பரையிலந்வயித்ததும், ஸ்ரீகீதையு மபயப்ரதாநமு மருளிச்செய்ததும்.

432. ஆசார்யனுக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரம் பண்ணலாவது விபூதி சதுஷ்டயமும் ஈச்வரத்வமு முண்டாகில்.

433. ஈச்வர ஸம்பந்தம் பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும். ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும்.

434. பகவல்லாபம் ஆசார்யனாலே.

435. ஆசார்யலாபம் பகவானாலே.

436. உபகார்யவஸ்து கௌரவத்தாலே ஆசார்யனில்காட்டில் மிகவுமுபகாரகன் ஈச்வரன்.

437. ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே கிடந்தால் ஜ்ஞானபக்தி வைராக்யங்களுண்டாக்கிக்கொள்ளலாம். ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அவையுண்டானாலும் ப்ரயோஜனமில்லை.

438. தாலிகிடந்தால் பூஷணங்கள் பண்ணிப்பூணலாம்; தாலிபோனால் பூஷணங்களெல்லா மவத்யத்தை விளைக்கும்.

http://acharya.org

சத்காரயோக்யர் — உண்டு, உறங்கும் மட்டும் [illegible] போல்.
ஸஹவாஸயோக்யர் — [illegible] போற்றுவர்கள்.
ஸ்வரூப ,, — ஆசார்யபுத்ரர்கள் போற்றுவர்கள்.



439. தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யன் தானே நீரைப்பிரிந்தால் அந்தையுலர்த்துமாபோலே, ஸ்வரூப விகாஸத்தைப்பண்ணுமீச்வரன் தானே, ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தாலத்தை வாடப்பண்ணும்.

440. இத்தையொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்.

441. இரண்டு மமையாதோ, நடுவில் பெருங்குடி யென்றென்னில்.

442. கொடியைக்கொள்கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால்வேண்டுமா போலே, ஆசார்யாந்வயத்துக்கும் இது வேணும்.

443. ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட விவனுக்கு, ஆசார்யாபிமாநமொழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலு மருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும்.

444. ஸ்வ ஸ்வாதந்த்ர்யபயத்தாலே பக்தி நழுவிற்று.

445. பகவத் ஸ்வாதந்த்ர்யபயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.

446. ஆசார்யனையும் தான் பற்றும்பற்று அஹங்கார கர்ப்பமாகையாலே, காலன்கொண்டு மோதிரமிடுமோபாதி.

447. ஆசார்யாபிமானமே யுத்தாரகம்.

448. கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவனல்லன்.

449. விடாய்பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து, ஜீமூத ஜலத்தையும் ஸாகர ஸலிலத்தையும் ஸரித்ஸலிலத்தையும் வாபீ கூபபயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக் கடவனல்லன்.

450. பாட்டுக்கேட்குமிடமும், கூப்பீடுகேட்குமிடமும், குதித்தவிடமும், வளைத்தவிடமும், ஊட்டுமிடமும் எல்லாம் வகுத்தவிடமே யென்றிருக்கக்கடவன்.

451. இவனுக்கு ப்ரதிகூலர் ஸ்வதந்த்ரரும் தேவதாந்தரபரரும்; அநுகூலராசார்ய பரதந்த்ரர்; உபேக்ஷணியர் ஈச்வர பரதந்த்ரர்.

452. ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் அல்லாதார்க்கு உபாயாங்கமாயிருக்கும், இவனுக்கு உபேயாங்கமாயிருக்கும்.

453. இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம் தன்னையும் பிறரையும் நசிப்பிக்கையாலே த்யாஜ்யம்.

454. தான் நசிக்கிறது மூன்றபசாரத்திலும் அந்வயிக்கையாலே; பிறர் நசிக்கிறது தன்னை யநாதரித்தும் தன்னனுஷ்டானத்தை யங்கீகரித்தும்.

http://acharya.org

455. விஹிதபோகம் நிஷித்தபோகம்போலே லோக விருத்தமுமன்று; நரகஹேதுவுமன்று; ஆயிருக்கச்செய்தே ஸ்வரூபவிருத்தமுமாய் வேதாந்தவிருத்தமுமாய் ப்ராப்யப்ரதிபந்தகமுமாய் இருக்கையாலே த்யாஜ்யம்.

456. போக்யதாபுத்திகுலைந்து தர்மபுத்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபம் குலையும்.

457. "க்ஷேத்ராணி மித்ராணி" என்கிற ச்லோகத்திலவஸ்தை பிறக்க வேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு.

458. ப்ராப்யபூமியில் ப்ராவண்யமும், த்யாஜ்யபூமியில் ஜிஹாஸையும், அநுபவாலாபத்தில் ஆத்மதாரணாயோக்யதையும், உபாய சதுஷ்டயத்துக்கும் வேணும்.

459. "பழுதாகா தோன்றறிந்தேன்" என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.

460. "நல்லவென் தோழி" "மாறுய தானவனை" என்கிற பாட்டுக்களையும் ஸ்தோத்ரத்தில் முடிந்த ச்லோகத்தையும் "பசுர்மநுஷ்யஃ" என்கிற ச்லோகத்தையும் இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.

461. ஆசார்யாபிமானந்தான் ப்ரபத்திபோலே உபாயாந்தரங்களுக் கங்கமாய் ஸ்வதந்த்ரமுமாயிருக்கும்.

462. பக்தியிலசக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபத்தியிலசக்தனுக்கு இது.

463. இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாக்கும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ வ ச ந பூ ஷ ண ம்

முற்றிற்று.

---

http://acharya.org